ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

ECHOES இந்தியா செய்திமடல்



# 2015

## புத்தாண்டுச் செய்தி

*"நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள்" என்று கேட்கப்படும் போது நாமெல்லோரும், "நான் ஒரு அப்யாசி", என்று நம்மை அறிமுகப்படுத்திக்கொள்ள நான் விரும்புகிறேன். ஏனெனில் அது தான் என்னுடைய வாழ்க்கை மற்றும் என்னுடைய இதயத்தின் பிரதான விஷயமாகும். 'நான் ஒரு அப்யாசி' என்பது நமது இதயத்தில் நிரந்தரமாகப் பதிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு நொடியும் அது எவ்வளவு ஆழமாய்ப் பதிந்திருக்கவேண்டும் என்றால் ஒரு வினாடி கூட அவருடைய அன்பார்ந்த நினைவின்றிக் கழியக்கூடாது. வீணடிக்கப்பட்ட வினாடிக்காக வருந்த வேண்டும். இல்லையென்றால் வருடங்கள் பல பறந்தோடும், பாலைவனத்தில் மறைந்து போகும் ஆறுகளைப் போல வாழ்வானது மிதக்கும். நமது வாழ்க்கையும் கூட முடிவற்ற இக்கால மகா சமுத்திரத்தில் மறைந்து விடும்."*

கம்லேஷ் D. படேல், ஜனவரி 1, 2015 மணப்பாக்கம்

## மணப்பாக்கத்திலிருந்து செய்திகள்

### அக்டோபர் 2014

புதன்கிழமை அக்டோபர் 1ம் தேதியன்று மாஸ்டர் சக்கர நாற்காலியில் வெளியே வந்து, 2ம் தேதியிலிருந்து தொடங்கவிருந்த ஐந்து நாள் சீனக்கருத்தரங்கில் பங்கு பெற வந்திருந்த சுமார் 20அப்யாசிகளை சந்தித்தார். 4ம் தேதி மாலை 6 மணிக்கு மாஸ்டர் சுமார் ஒரு மணி நேரம், காட்டேஜ் வாயிலில் குழுமியிருந்த சீனா மற்றும் தென் ஆப்பிரிக்காவிலிருந்து வந்திருந்த சில அப்யாசிகளுடனும் அமர்ந்திருந்தார். மொழி பெயர்த்துக்கொண்டிருந்த ஒரு சகோதரரின் உதவியுடன் அவர் அவர்களுடன் உரையாட முடிந்தது. ஒருங்கிணைப்பாளர்கள் அப்யாசிகளை மாஸ்டருக்கு அறிமுகம் செய்து வைத்தனர். ஒரு அப்யாசி, புல்லாங்குழலில் இயல்பு மாறா சீனப் பாணியில் இரண்டு பாடல்களை வாசித்த போது மாஸ்டரும் சுற்றியிருந்தோரும் அதனை ரசித்தனர். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு மாஸ்டர் மிகவும் களைப்படைந்ததால் அவர் நேராகப் படுக்கைக்குச் சென்று விட்டார்.

#### ஆஸ்திரேலியக் கருத்தரங்கு

5ம் தேதியன்று பிரிஸ்பேனில் நடைபெற்ற ஆஸ்திரேலியக் கருத்தரங்கின் நேரடி ஒளி ஒலி கலந்தாய்வின் போது சகோ.கம்லேஷ், மாஸ்டருக்கு உடல் வேதனைகள் இருந்த போதிலும் அவர் இன்முகமான ஏற்புத்தன்மையுடன் தமது பணிகளை செய்வதாகவும், அவ்வாறு அவர் செய்வது அவரை சுற்றியிருப்போருக்கு மகிழ்வையும் ஆன்மீக உயர்வையும் அளிப்பதாகவும் கூறினார். மாஸ்டருக்குப் பல உடல் உபாதைகள் இருந்த போதிலும் அவர் எப்பொழுதும் மற்றவர்களுக்கு - அவர்கள் ஆசிரமத்திற்கு அருகில் இருந்தாலும் தூரத்தில் இருந்தாலும், அவர்களுக்கு ஆன்மீகப் பணி புரிவதைப் பற்றியே அக்கறை கொண்டிருந்தார். மேலும் சகோ.கம்லேஷ், மாஸ்டர் தமது நோய்க்குச் சில விதமான சிகிச்சைகளைத் தவிர்ப்பதாகவும், அதன் காரணம் அவை அவருக்கு தொற்று நோய் தாக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தி, அவர் அப்யாசிகளை சந்திக்க முடியாமல் செய்து விடும் என்பதாகும் என்று கூறியதும் அப்யாசிகள் மிகவும் நெகிழ்ந்து விட்டனர்.

பிரிஸ்பேனில், ஏறத்தாழ நூறு அப்யாசிகளும், முப்பது குழந்தைகளும், 'குதூகலத்துடன் தியானம் செய்' என்ற





தலைப்பில் ஒரு தேசிய அளவிலான கூட்டத்தில் ஒன்று கூடியிருந்தனர்.

**சீனக் கருத்தரங்கம்**

காலை 11.00 மணியளவில், மாஸ்டர் காட்டேஜுக்கு முன்புறமாக வெளியில் வந்தார், மேலும் சீன அப்யாசிகளுடன் குழு புகைப்படமும் எடுக்கப்பட்டது. அக்டோபர் 6ம் தேதி, திங்கட்கிழமை, சீன கருத்தரங்கின் இறுதி நாள் என்பதால் சகோ.கம்லேஷ் நிறைவு சத்சங்கத்தை நடத்தினார்.

அக்டோபர் இரண்டாவது வாரம், மாஸ்டரின் தினசரி வேலையில் சிறுமாறுதல்கள் இருந்தன. சில சமயங்களில், காலையில் வெகு நேரம் கழித்து, 9.30 அல்லது 10.00 மணிக்கு மேல் எழுந்திருப்பார். காலை உணவுக்குப்பின், சிறிது நேரம் செய்திகள் கேட்பதில் கழிப்பார். இரண்டு நாட்கள், அவர் வெளியில் வந்து சூரிய வெளிச்சத்தில் வந்தமர்ந்தார். பின் ஓய்வு எடுக்கச் சென்றுவிட்டு 3.00 மணியளவில் எழுந்து அதன்பின் மதிய உணவு உண்பார். மதிய வேலையில் சிறிது நேரம் TV பார்த்து அல்லது புத்தகம் படிப்பதைக் கேட்பார். மாலை நேரங்களில்



வெளியில் வருவார். நிறைய நேரம் அமைதியாகவே இருப்பார். அப்யாசிகளை சந்திக்கும் போதும் ஆசீர்வாதம் மட்டுமே செய்வார்.

அக்டோபர் 7ம் தேதி, செவ்வாயன்று, ஒமேகா பள்ளியிலிருந்து, முன்பு ஒரு நாள் பியானோ வாசித்த சிறுமி, வந்து பியானோ வாசித்தாள். மாஸ்டர் அமைதியாக அமர்ந்து கவனித்தார்.

**US கருத்தரங்குடன் வீடியோ கான்பெரன்ஸ்:** அக்டோபர் 11ம் தேதி, அமெரிக்க கருத்தரங்கில் கலந்து கொண்டிருக்கும் அப்யாசிகளுக்கு உரையாற்ற வீடியோ கான்பெரன்ஸ் வைப்பதற்கான திட்டம் உள்ளது என்பதை மாஸ்டரிடம் தற்செயலாக சகோ.கம்லேஷ் கூறினார். அப்யாசிகளுக்கு உரையாற்ற முடியுமா என்று சகோ.கம்லேஷ் அவரிடம் கேட்டார். "ஏன் முடியாது" என்று மாஸ்டர் பதிலளித்தார். சகோ.கம்லேஷ் இதை ஆச்சரியமூட்டும் விஷயமாக வைத்திருக்குமாறு அனைவரிடமும் கூறினார். இரவு உணவிற்கு பின் மாஸ்டர் அப்யாசிகளுக்கு உரையாற்றினார். மொலெனா, மோன்ரோ, சான் ஜோஸ், டெக்ஸாஸ் போன்ற நாடுகளில் இருக்கும் பெரிய மையங்களிலிருந்து அப்யாசிகள் குழுமியிருந்ததை திரையில் பார்க்க முடிந்தது. மாஸ்டர் 20-30 நிமிடங்கள் பேசினார். அமெரிக்கா முழுவதும் உள்ள நிறைய அப்யாசிகளுக்கு உரையாற்றியதில் மாஸ்டர் மகிழ்ச்சியடைந்தார்.

அக்டோபர் 10-12 வார இறுதி நாட்களில், அமெரிக்கா முழுவதிலும், அப்யாசிகள் ஆறு இடங்களில் குழுமியிருந்து 'அன்பான இதயத்தை உருவாக்குதல்' என்ற தலைப்பில் நடைபெற்ற, தேசிய அளவிலான கருத்தரங்குக்கு ஒன்று கூடினர். நமது இதயங்களை பயன்படுத்த நாம் போதுமான அளவு பக்குவம் அடைந்துள்ளோம் என்று அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று மாஸ்டர் தனது உரையில் வலியுறுத்தினார். "எவ்வாறு பயன் படுத்துவது? அன்பு தான் ஒரே வழி". இதயத்தை பயன்படுத்தினால் நாம் தவறாக செல்ல மாட்டோம். நாம் அதை பயன்படுத்த அச்சம் கொள்ள தேவையில்லை. இதயமில்லாமல் ஆன்மீக வாழ்க்கையே இல்லை.

**அக்டோபர் 22-23: தீபாவளி பண்டிகை:** 22ம் தேதி சகோ.கம்லேஷ் சத்சங்கம் நடத்தினார். பின் காலை வெகு நேரம் கழித்து மாஸ்டர் வெளியில் வந்தார். தியான மண்டபத்திற்கு வர முடியவில்லை என்று அவருக்கு வருத்தமாகவே இருந்தது. மதிய வேளையின் போது, காலையிலிருந்து அவரது பார்வைக்காக காத்திருந்த சில அப்யாசிகளை சந்தித்தார்.

மாலையில், மாஸ்டர் கோல்ப் வண்டியில் ஆசிரமத்தை சுற்றி வந்தார். குழுமியிருந்த அனைவரும் அவரை பார்க்க ஆவலுடன் இருந்ததால், காவலருக்கு சூழ்நிலையை கட்டுப்படுத்த மிகக் கடினமாகவே இருந்தது. இருப்பினும் நிறைய அப்யாசிகளை மாஸ்டர் பார்வையிட்டு சமாளித்தார். நிறைய பேர் அவரை பார்ப்பதற்காகவே வந்திருந்ததால், மறுபடியும் வெளியில் சென்று அனைவரையும் பார்க்க வேண்டும் என்று ஒவ்வொருவரிடமும் கூறிக்கொண்டிருந்தார். வியாழனன்று, அவரால் வெளியில் வரமுடியவில்லை எனினும், காட்டேஜிலிருந்தே வரும் அப்யாசிகளை சந்திக்க நேரம் ஒதுக்கிக் கொண்டார். காட்டேஜ் உட்புறத்தில் தீபங்கள் ஏற்றப்பட்டு, அப்யாசிகளின் இதயங்களைப் போலவே ஒளியூட்டப்பட்டிருந்ததால், அங்கு ஒரு விழாக்கால உணர்வு இருந்தது.

**அக்டோபர் 24 ஆம் தேதி, வெள்ளிக்கிழமை:** மாலையில், தியானக் கூடத்தில் நடைபெற்ற, குஜராத் சகோதரிகளின் "கர்பா" நடனத்தை, மாஸ்டர் CCTV மூலம் பார்த்தார். நடன நிகழ்ச்சியை நடத்திய சகோதரிகளும்

குழந்தைகளும் மாஸ்டரைச் சந்திக்க காட்டேஜுக்கு சென்றனர். மாஸ்டர் அவர்களோடு

பேசிக்கொண்டிருந்ததுடன், அனைவருக்கும் பரிசுகளும் வழங்கி, " இந்தப் பரிசு மிகவும் மதிப்பு மிக்கது. இதை யாருக்கும் கொடுத்துவிட வேண்டாம்" என்று சொன்னார். அப்யாசிகள், "மாஸ்டர் நீங்கள் எங்களுக்கு மிகவும் மதிப்பு மிக்கவர். ஆகவே நீங்கள் தரும் அனைத்தும் எங்களுக்கு மதிப்பு மிக்கது தான்." என்றனர்.

**அக்டோபர் 26ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமை: அப்யாசிகளுக்கான மாஸ்டரின் அருட்செய்தி:** அமெரிக்க கருத்தரங்கின் போது, நேரடி ஒலி ஒளித் தகவல் தொடர்பின் மூலமாக, நிறைய பேருக்கு அருட்செய்தி வழங்க முடிந்ததை எண்ணி மகிழ்ந்த மாஸ்டர், "இது போன்ற இன்னும் நிறைய விஷயங்களை செய்வது நன்றாக இருக்கும்." என்று சொன்னார். அதற்கு அடுத்த நாளே சகோ. கம்லேஷ் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, மாஸ்டர் நேரடி இணைய தள ஒலி ஒளிபரப்பு மூலமாக உலகம் முழுவதிலுமுள்ள அனைத்து அப்யாசிகளுக்கும் தனது அருட்செய்தியை வழங்குவார் என்று அறிவித்தார்.

மாஸ்டர் அதிகாலையிலேயே தயாராகிவிட்டார். ஆனால் காலை உணவுக்கு முன்னால், "நான் எல்லோருக்கும் இன்று செய்தி வழங்குவதாக இருக்கிறது. ஆனால் நான் என்ன சொல்லப் போகிறேன் என்று எனக்குத் தெரியாது. எப்படியிருந்தாலும் ஏதாவது வரும்" என்று மேலே சுட்டிக்காட்டிய வண்ணம் கூறினார். ஆசிரமங்களிலோ, சகஜ மார்க்க மையங்களிலோ அல்லது தங்களது வீட்டிலேயே இணைய தள தொடர்பு மூலமாகவோ கூடியிருந்து கவனித்த உலகம் முழுவதிலுமான அப்யாசிகளுக்கு மாஸ்டர் சுமார் 50 நிமிடங்கள் அருளுரை வழங்கினார். அந்த உரை முடிந்ததும் மாஸ்டரின் முகத்தில் ஒரு திருப்தி நிறைந்த உணர்வை எல்லோராலும் காண முடிந்தது. இதைப் போன்ற ஒரு பெரிய கூட்டத்திற்கு முன்னால் அவர் உரை நிகழ்த்தி பல மாதங்கள் ஆகியிருந்தன. அந்த உரைக்குப் பிறகு மாஸ்டர் வெளியே அமர்ந்தார். இந்த நிகழ்வு முடிந்தவுடனேயே, அப்யாசிகள், அவர்கள் மாஸ்டரின் உரையைக் கேட்டு எவ்வாறு உணர்ந்தார்கள் என்றும், மாஸ்டரின் பேச்சு அவர்களிடம் எந்த வித பாதிப்பை ஏற்படுத்தியது என்பதைப் பற்றியும் விவரித்து, நிறைய மின்னஞ்சல்கள் அனுப்பியிருந்தார்கள். இதை கேட்டதும் மாஸ்டர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

**அக்டோபர் 27 ஆம் தேதி, திங்கட்கிழமை: மாஸ்டரின் வெளி உலா:** கிருஹப்பிரவேசத்திற்குத் தயாராக இருந்த ஒரு அப்யாசியின் வீட்டிற்கு செல்வதென மாஸ்டர் முடிவெடுத்தார். தனது கோல்~ஃ வண்டியில் அங்கு சென்று, பிரசாதம் வழங்கி, வீடு முழுவதும் வலம் வந்து, சமையலறையில் பால் காய்ச்ச அடுப்பைப் பற்ற வைத்தார். சில குழந்தைகள், கர்நாடக சங்கீதப் பாடல்கள் பாடியதை கூடத்தில் அமர்ந்து கேட்டார். அதன் பிறகு அவர் தனது காட்டேஜுக்குத் திரும்பினார்.

புதன்கிழமை 29 ஆம் தேதி மாஸ்டர் ஒரு சத்சங்கம் நடத்தி, ஒரு திருமணத்தையும் நடத்தி வைத்தார். நீண்ட காலத்திற்குப் பின், காட்டேஜில் ஒரு திருமணம் நடந்ததைக் காண்பது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. குழுப் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. அங்கே ஒரு பண்டிகைக் கால சூழ்நிலை பரவியிருந்தது.

31 ஆம் தேதி மாஸ்டருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டு, சில பரிசோதனைகள் செய்யப்பட்டன. சகோ.கிருஷ்ணா இரவில் அவருடன் இருப்பதற்காக வந்தார்.

## நவம்பர் 2014

### மாஸ்டரின் உடல்நிலை

நவம்பர் மாத ஆரம்பத்தில், மாஸ்டருக்கு தொற்று நோய் ஏற்பட்டு, நோய் தடுப்பு மருந்துகள் தருவது தொடங்கப்பட்டது. ஒரு நாள் காலை மாஸ்டர் தனது அலுவலக அறைக்கு வந்த போது மிகவும் புத்துணர்வுடன் காணப்பட்டார். அவர் தனது காலை உணவை முடித்துக் கொண்டு, செய்திகளைத் தெரிந்து கொண்டவுடன், "பிரதான் மந்திரி" (இந்தியாவின் பிரதம மந்திரிகளைப் பற்றிய தொலைக்காட்சித் தொடர்) என்ற தொலைக்காட்சி தொடரைப் பார்க்க விருப்பப்பட்டார். அதன் பிறகு சிறிது நேரம் வெளியே வந்தமர்ந்தார்.

அந்த வார இறுதியில், முதுகு வலியின் காரணமாக, MIOT மருத்துவமனையில் மாஸ்டருக்கு ஸ்கேன் எடுக்கப்பட்டது. அப்போது, மாஸ்டரால் தனது வலது கையைச் சரியாக இயக்க முடியவில்லை. ஆனால் காலந்தாழ்த்தாத ஆற்றல் மிக்க சிகிச்சையின் காரணமாக அந்த பாதிப்பு வெகுவாகக் குறைக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்டிருந்த தொற்று நோய் ஒரே வாரத்தில் சரியாக்கப்பட்டது. அவரது வலது கையும் மெல்ல மெல்ல சரியாகி மீண்டும் எப்போதும் போல இயங்க ஆரம்பித்தது. மாஸ்டருக்கு ஏற்பட்டிருந்த தொற்று நோய் காரணமாக, காட்டேஜில் அதிகம் பேர் இருக்கக் கூடாது என மருத்துவர்கள் கூறினர்.

மாஸ்டர் தனது வலது கரம் சரியாக இயங்குவதற்கு சில உடற்பயிற்சிகளை செய்தார். ஜெர்மனியிலிருந்து வந்திருந்த ஒரு சகோதரி வலது கரம் சரியாக இயங்குவதற்கான உருவி விடும் (Massage) சிகிச்சையைச் செய்தார். அது நல்ல பலனை அளித்தது. மாஸ்டர் தனது பெயரைக் கையெழுத்திட பயிற்சி செய்தார். தனது பேனாவை இதமாகப் பிடித்துக்கொண்டு மெதுவாக எழுதுவதற்கு முயற்சி பண்ணுவார். மெல்ல மெல்ல இந்த முன்னேற்றமானது




இளைஞர் கருத்தரங்கின் பங்கேற்பாளர்களுடன்

தெளிவாகத் தென்பட ஆரம்பித்தது. தனது தினசரி வேலைகளை எப்போதும் போல செய்வதற்குத் தன்னைத் தயார் படுத்திகொள்வதற்காக மாஸ்டர் கொண்டிருந்த இந்த உறுதியான தீர்மானம், எல்லோருக்கும் புதிய ஊக்கத்தை அளிப்பதாக இருந்தது. "மாஸ்டருக்கு எப்போதுமே மனம் தான் எல்லா விஷயங்களுக்கும் மேலானது" என்பதை மருத்துவர்கள் சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். நவம்பர் இரண்டாவது வார இறுதியில், அவரால் மிகவும் குறைவான சிரமத்துடன் எழுத முடிந்தது. மற்றும் ஒரு ப்ரிபெக்டின் சான்றி தழுக்கும் அவர் தனது கையொப்பம் இட்டார். இரண்டாம் வாரத்தில் மாஸ்டரின் உடல் நலத்தில் சிறிது நிலையான முன்னேற்றம் இருந்தது. ஒரு சமயம் அவர் படுக்கை அறையில் இருந்து வெளியில் வந்து அமர்ந்து புத்துணர்வுடன் காணப்பட்டார். கமலேஷ் பாயிடம் அவருடன் அங்கு காலை உணவினை உட்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். மாஸ்டர் செய்திகளை மிகக் கவனமாய் கேட்டார். அவர் வெளியில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக அமர்ந்திருந்தார். கமலேஷ் பாய் அவருடைய கணினியில் இசைக்கச் செய்த காலம் சென்ற பீம்சென் ஜோஷி (இந்திய பாடகர்) பாடிய இரண்டு பாடல்களை, மாஸ்டர் கண்களை மூடியவாறு கேட்டார். இசை தொடர்ந்து கொண்டு இருக்கும்போதே மாஸ்டர் ஒவ்வொருவரின் மீதும் பணி செய்து கொண்டிருந்ததை ஒருவரால் உணர முடிந்தது. மும்பை பல்கலைக்கழகத்தில் இயக்குநராக பணி புரியும் ஒரு புதிய அப்யாசி மாஸ்டருடன் அமர்ந்து இருந்தார். பின்னர் இந்த சகோதரி தன்னை அறிமுகம் செய்து கொண்டு சுருக்கமாக கருத்து பரிமாறிக்கொண்டார். அதன் பின்னர் மாஸ்டர் ஓய்வு எடுக்கச்சென்று விட்டார். இந்த நிகழ்வுகள் யாவும் முடிய மூன்று மணி நேரம் ஆனது.

**நவம்பர் 21 வெள்ளிக்கிழமை**

அவருடைய ஆசியைப் பெற வந்த, சமீபத்தில் திருமணம் ஆன தம்பதியரை மாஸ்டர் சந்தித்தார். பின்னர் குடிலுக்கு வெளியே சூரிய ஒளியில் அமர வந்தார். அப்யாசிகள் மெல்ல மெல்ல வரத்தொடங்கினர். வாயிற் கதவுகள் திறக்கப்பட்டதால், அனைவரும் உள்ளே வந்து மாஸ்டருடன் அமர முடிந்தது.

வெளியில் அமர்ந்து இருந்தபோது மாஸ்டர் பெரும்பாலும் மௌனமாக இருந்தார். அந்த சூழ்நிலையில் ஒவ்வொருவரும் தங்களை மறந்திருந்தனர். எப்போதாவது அப்யாசிகள் சில விஷயங்களைத் தெரிவிக்கும் போது உரையாடல்கள் நிகழ்ந்தன.

நவம்பர் 23 ஞாயிற்றுக் கிழமை அன்று மாஸ்டருக்கு வேறு ஒரு தொற்று நோய் ஏற்பட்டது, கவலையினைத் தந்தது. சில பரிசோதனைகள் செய்த பின்னர் அவர் மீண்டும் நோய் தடுப்பு மருந்தை எடுத்துக்கொள்ளத் தொடங்கினார். மாஸ்டர் தன் உடல் முழுவதும் வலி அனுபவிப்பதைப் பார்க்க மிகவும் கடினமாக இருந்தது. பல நாட்கள் அவர் படுக்கையிலேயே இருந்தார்.

**இளைஞர் கருத்தரங்கு**

நவம்பர் 28ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு இளைஞர் கருத்தரங்கின் பங்கேற்பாளர்களுடன் நேரத்தினை செலவிட, மாஸ்டர் வெளியே வந்தார். கருத்தரங்கம் திங்கள் முதல் வெள்ளி வரை இருந்தது. நாட்டின் அனைத்து பகுதிகளில் இருந்தும் 250 நபர்கள் கலந்து கொண்டனர். ஒவ்வொரு நாளும் கமலேஷ் பாய் காலை 6.30 மணிக்கு சத்சங்கம் நடத்தி, 9.00 மணிக்கு உரை நிகழ்த்தினார். குழு விவாதங்கள் இருந்தன. மாலையில் சில சுவாரசியமான திரைப்படங்களும், ஆவணப் படங்களும் காட்டப்பட்டன.

மாஸ்டர் வெளியே வந்து அமர்ந்தார். கருத்தரங்கில் பங்குபெற்ற அப்யாசிகள் குடிலினுள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். முந்தைய ஞாயிறு அன்று கருத்தரங்கு பற்றி அறிந்தபோது மாஸ்டர், "'இளைஞர்களாக இருக்கும் போதே அவர்களைப் பிடித்துக் கொள்' என்ற சொற்றொடரில் எனக்கு நம்பிக்கை உள்ளது" என்றார். மாஸ்டர் அதிகம் உரையாடவில்லை. ஆனால் ஒரு அப்யாசி 10 நியமங்களைப் பற்றிப் பேசியதை, மாஸ்டர் கவனமாகக் கேட்டார். உள்ளே திரும்பிச் செல்வதற்கு முன்பாக 90 நிமிடங்கள் இளைஞர்களுடன் செலவழித்தார்.

**29 நவம்பர் சனிக்கிழமை:: புதிய கட்டுரை :** கடந்த இரண்டு ஆண்டுகளாக சார்ட்டர்டு அக்கவுண்டன்சி படிப்பினைத் தேர்ந்தெடுத்த மாணவிகளின் எண்ணிக்கை, 50 விழுக்காடு அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த கட்டுரையினை படித்ததைக் கேட்ட மாஸ்டர், இந்த செய்தியினைக் கேட்க மகிழ்ச்சியாக இருப்பதாகத் தெரிவித்தார். "நம் பெண்களிடம் இந்த வேலை அவர்களுக்கு மிகவும் பாதுகாப்பானது என பல ஆண்டுகளாக சொல்லி வருகிறேன். அவர்களுக்கு வேலை நேரங்கள் எளிதாக இருக்கும். ஆபத்தான இரவு நேரங்களில் வேலை செய்ய வேண்டிய தேவை இருக்காது." எனக் கருத்துத் தெரிவித்தார். பிறகு உரையாடல் பொதுவான வாழ்க்கையினை பற்றி திரும்பியது. மாஸ்டர், அதிகரித்து வரும் தேவைகள் குறித்த, தன் கருத்தினைத் தெரிவித்தார். "எங்கள் காலத்தில் ஒரே ஒரு அளவில் தான் குளிர்சாதனப்பெட்டி இருந்தது. தேர்ந்தெடுக்க வேறு அளவு கிடையாது. தற்போது பெரிய பெரிய அளவிலான குளிர்சாதனப்பெட்டிகளைப் பெற்றுள்ளீர்கள் அதில் மீந்துபோன பீட்ஸா, பாஸ்தா போன்ற பொருட்களை நிரப்புகின்றீர்கள். ஒரு கார் இருக்கும் போது இரண்டாவது கார் தேவையாக உள்ளது. அடிப்படையில் எவ்வளவு தேவையோ அந்த அளவுக்கு நம் தேவைகளை கண்டிப்பாக கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். பிறகு நாம் மகிழ்வாகவும் மன நிறைவுடனும் இருக்க முடியும்" என்றார் அவர்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## டிசம்பர் 2014

### இறுதி வாரங்கள்

### பிரசெப்டர்களுக்கான குழு சிட்டிங்குகள்:

மாஸ்டர், டிசம்பர் 3, 4ம் தேதிகளில் 39 புது பிரசெப்டர்கள் அடங்கிய குழுவிற்கு கடைசி சிட்டிங் கொடுத்தார். அனைவரின் சான்றிதழ்களிலும் கையொப்பமிட்டார். பின் வந்த அனைத்து நாட்களிலும் காலை உணவிற்குப்பின் ஓய்வெடுக்க சென்றுவிட்டார். பின், பகலில் தான் கண் விழித்தார்.



### 880 மின் அழுத்த பிராணாஹுதி

அமெரிக்காவை சார்ந்த 83 வயதான ஒரு அப்யாசி 4 மணி நேரம் காத்திருந்தபின், மாஸ்டரை சந்தித்துப் பேசிய பொழுது, "மாஸ்டர்! நீங்கள் ஒரு சமயம் சிட்டிங் கொடுத்த போது, 880 மின் அழுத்த மின்சாரம் போன்ற பிராணாஹுதி எனக்குள் செலுத்தப்பட்டது போல் உணர்ந்தேன். நான் அப்படியே ஸ்தம்பித்து போய்விட்டேன்" எனக்கூறினார். மாஸ்டர் சிரித்துக்கொண்டார். பின் அந்த அப்யாசி, "நீங்கள், உங்களிடம் வரும் ஒவ்வொருவருக்கும் பிராணாஹுதி அளித்தவண்ணம் இருப்பதைக் கண்டு என் மனம் உருகிப்போகிறது" எனக் கூறினார். மாஸ்டர் மறுபடியும் சிரித்தார். அதற்குப்பின்னான கணம் மிகவும் அமைதியாக இருந்தது. அக்கணத்தில் என்ன நிகழ்ந்தது என்பதை மாஸ்டர் ஒருவரே அறிவார். அறையில் இருந்த யாவரும் கண்களில் நீர்மல்க, மனநெகிழ்ச்சியுற்றனர்.

### அமைதியான சிட்டிங்

ஒரு மாலைப்பொழுதில் மாஸ்டர் மிகுந்த உடல் வலியுடன் காணப்பட்டார். அவர் கண்கள் மூடியிருந்தன. அவர் தூங்கப்போவது போல் காணப்பட்டார். ஆனால் திடீரென்று அவர் "THAT'S ALL" என்று கூறி, தான் சிட்டிங் கொடுத்துக்கொண்டிருந்ததாக விவரித்தார். அவர் உடல் நிலை சீராக இல்லாத போதும், அவரின் பணி தொடர்ந்துகொண்டே இருந்தது.

### புதன் கிழமை, டிசம்பர். 10 ம் தேதி.

மாஸ்டரின் உடல்நிலை குறித்த மனக்கவலையுடன், சகோ.கிருஷ்ணா, மாஸ்டரின் குடிலிலேயே தங்க முடிவு செய்தார். பல நாட்களுக்குப்பின் மாஸ்டர் சிறிது தெளிவுடன் காணப்பட்டார். தன் கோல்ஃப் வண்டியில் வெளியே செல்லவும் தீர்மானித்தார். ஆனால் அடுத்த நாளே மிகவும் நோய்வாய்ப் பட்டு விட்டார்.

### பொழுதுபோக்கு

மாஸ்டர் மாலை வேளைகளில் திரைப்படம் மற்றும் TV தொடர்களை கண்டு ரசித்தார். "புத்தா" தொடரில், புத்தரின் வாழ்க்கையின் கடைசி நாட்களையும், அவர், தன் உணவில் நஞ்சு கலந்திருப்பதை அறிந்தும், அதை உண்டதையும் காண்பித்தனர். உடனே ஒருவர், "மாஸ்டர்! உங்களுக்கும் இதே மாதிரி நடந்ததல்லவா. உங்களுக்கு தெரிந்தபின்னும் அதை புசித்தீர்களே! ஏன் அப்படி" என வினவினார். அதற்கு மாஸ்டர் "அது அப்படித்தான்" என பதிலளித்தார்.

### உங்கள் பணியினைச் செவ்வனே செய்யுங்கள் :

ஒரு நாள் ஒரு சகோதரி மாஸ்டரிடம், " மாஸ்டர் ! தாங்கள், தாங்கொணா வேதனைப்படுகிறீர்களே, அதை நானும் பகிர்ந்து கொள்ள அனுமதி தாருங்கள்" என வேண்டிக்கொண்டார். அதற்கு மாஸ்டர், மிகுந்த மென்மையோடு, புன்சிரிப்புடன் "அது தடை செய்யப்பட்டது; கேட்கப்படக்கூடாத ஒன்று. எனக்காக ஏதாவது செய்ய ஆவலுற்றால், தங்கள் பணியை செவ்வனே செய்து வாருங்கள். அது ஒன்று தான் நீங்கள் செய்யக்கூடிய சிறந்த செயலாகும்" என அன்புடன் பதிலளித்தார்.

### மாஸ்டரிடமிருந்து அருட்செய்தி

டிசம்பர்.15ம் தேதி திங்களன்று, ரஷ்ய கருத்தரங்கு ஆரம்பமாயிற்று. மாஸ்டர், தன் படுக்கையிலிருந்தபடியே அருட்செய்தி பதிவு செய்தார். அது தியான மண்டபத்தில் ஒலி பரப்பப்பட்டது:

*"அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! உங்களுடன் இருக்க இயலாமைக்கு வருந்துகிறேன். ஆனால் நான் உள்ளத்தளவில் உங்களுடனேயே இருக்கிறேன். அதை நீங்கள் உணர்வீர்கள் என நம்புகிறேன். இங்கேயோ, ரஷ்யாவிலோ, அல்லது வேறு ஒரு நாட்டிலோ, உங்கள் யாவருடனும் எப்பொழுதும் எல்லாக்காலத்திலும், நான் இருக்கிறேன் என்று சொல்வதை தயவு செய்து நம்புங்கள். தொலைவு ஒரு பொருட்டே அல்ல! ஒரு வித்தியாசமுமில்லை. உங்கள் அனைவருக்காகவும் பிரார்த்திக்கிறேன். எல்லோருக்கும் நலமுண்டாக எனது ஆசிகள்."*

### இறுதி முறையாக வெளியில்;

அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட உபகரணம் மூலம் மாஸ்டர் படுக்கையிலிருந்து நேராக சக்கர நாற்காலில் அமர்ந்து, குடிலுக்கு வெளிப்புறம் கடைசி முறையாக சென்றார். காலை உணவு, மற்றும் நாளிதழ் வாசிப்புக்குப்பின், ஒரு குறிப்பிட்ட புத்தகத்தை படிக்கக்கூறி, கண்களை மூடிகேட்டுக்கொண்டி ருந்தார். மாஸ்டர் எப்பொழுதுமே புத்தகம் வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பவர். அதை அவர் கடைசி வரை தக்க வைத்துக்கொண்டிருந்தார். நாளிதழ் வாசிப்புக்குப்பின், முக்கியமாக, தூக்கம் வராத பொழுது, ஒரு புத்தகத்தை வாசிக்குமாறு கூறி, அதை அவர் மிகுந்த கவனத்துடன் கேட்பார். படிப்பவரின் உச்சரிப்பு தவறாக இருக்கும் பட்சத்தில் அதையும் அவர் சரி செய்வார்.

### இறுதி இரண்டு நாட்கள்

டிசம்பர். 18ம் தேதியிலிருந்தே மாஸ்டரின் உடல் நிலை சீராக இல்லை. பெரும்பாலும் தூங்கிக்கொண்டே இருந்தார். 20ம் தேதி மதிய நேரத்திற்குப்பின் மாஸ்டரின் உடல் நிலை கவலைக்கிடமாயிற்று. மூச்சு விடவும் சிரமப்பட்டார். மருத்துவர்களின் சிறப்பான சேவைக்குப்பின்னும், மாஸ்டர், இரவு சுமார் 9:45 அளவில் மகாசமாதி அடைந்தார். அவரின் ஒளி பொருந்திய சகாப்தம் நிறைவுற்றது.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்



## அகில இந்திய இளைஞர் கருத்தரங்கம்

**நவம்பர் 25 - 29, 2014**

நாடு முழுவதிலுமிருந்து, சுமார் 260 பங்கேற்பாளர்கள், "தூய்மை விதியை நிர்ணயிக்கிறது "என்ற மையப் பொருளுடைய கருத்தரங்கில் கலந்து கொண்டனர். பங்கேற்பாளர்கள் கருத்தரங்கத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே, முறையான முன்னேற்பாடுகளுடன் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கருத்தரங்கம், ஒவ்வொரு நாளும் காலை 6.30 மணிக்கு கம்லேஷ் பாய் அவர்களால் நடத்தப்பட்ட சத்சங்கத்துடன் துவங்கியது. அதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு அவரது உரை இருந்தது. அந்த நாள் முழுவதும் பல உரைகள், சுய ஆய்வு, அமைதி நேரம், குழு கலந்துரையாடல் மற்றும் தொண்டர் வேலை ஆகியவை இருந்தன.

கம்லேஷ் பாய் அவர்களின் உரைகளிலிருந்து சில முக்கிய துளிகள்;

- அவர், "சகஜ மார்க்கப்பார்வையில் ராஜயோகத்தின் செயல்திறன்" மற்றும் "அனந்தத்தை நோக்கி" ஆகிய இரண்டு புத்தகங்களும் இளைஞர்கள் கட்டாயமாக படிக்க வேண்டியவை எனப் பரிந்துரைத்தார்.
- கூருணர்வுத்திறன் பற்றி விளக்கும்போது, நமது உணர்வு நிலை உறுமும் கடலைப் போல் இருக்கும்போது, அதனுள் மிகப்பெரிய பாறை விழுந்தாலும் நம்மால் உணர முடியாது. அதற்கு பதிலாக, சிறிய இலை விழுந்தாலும் சிற்றலைகள் உருவாகின்ற அமைதியான குளம் போன்று, உணர்வு நிலை இருக்க வேண்டும் என்று கூறினார்.
- அவர் தூக்க முறையை மாற்றம் செய்வது பற்றி கூறுகையில், ஒவ்வொரு நாளும் சீக்கிரம் தூங்கி, சீக்கிரமாக எழ வேண்டும் என்பதை வலியுறுத்தினார். இந்த சிறிய மாற்றம், முழுமையான தன்மை மாற்றத்திற்கான திறவுகோலாக உள்ளது என்பதை வலியுறுத்தினார்.
- சிறு இலட்சியங்களை அமைத்துக்கொண்டு அதன் மூலமாக இறுதி இலட்சியத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும் என்று பரிந்துரைத்தார்.



அவருடன் இருந்த வினா- விடைப் பகுதி, அனைவரையும் ஈடுபடச் செய்தது. ஒவ்வொரு நாளும், தூய்மை என்ற கருத்தின் மீதான விஸ்பர்ஸ் அருட்செய்திகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட்டது. பிற்பகலில், தொடர்பு கொள்ளுதல் என்பதைப் பற்றிய பகுதியில்,- இதயத்தை உபயோகித்தல்( எலிசபெத் டென்லே) சகஜ மார்க்க வாழ்க்கை முறை ( புனித் லால்பாய்) பத்து நியமங்கள் (ரிஷி ரன்ஜன்) ஆகிய தலைப்புகளில் நிகழ்ச்சிகள் இருந்தன. சகோ.எஸ்.பிரகாஷ் குழு உருவாக்கம் பற்றிய செயல்பாட்டை நடத்தினார். அது, வேடிக்கையாகவும், இணைந்து செயல்படுவதில் உள்ள முக்கியமான படிப்பினைகள் பற்றியும் விளக்குவதாக இருந்தது. மாஸ்டருக்கு உடல் நலம் குன்றியிருந்த போதும், பங்கேற்பாளர்களுடன் நேரம் செலவழித்து, மேலும் அவர்களுள் ஒருவர் சாக்ஸபோன் வாசித்ததையும் கேட்டார். கருத்தரங்கம் நிறைவு பெறும் போது ஒவ்வொருவரும், மகிழ்ச்சி மற்றும் உண்மையான வீடு என்று அவர்கள் அறிந்து கொண்ட ஒரு இடத்தை விட்டுப் பிரியும் துக்கம் ஆகியவை கலந்த உணர்வுடன் அங்கிருந்து சென்றனர்.

## பிரிபெக்ட் தயார்படுத்துதல்- 6 ஆவது கூட்டம்

**நவம்பர் 28 முதல் டிசம்பர் 7 வரை**

நாடு முழுவதிலுமிருந்து, பிரிபெக்ட் பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 39 பேர், இந்த மிகப்பெரிய பிரிபெக்ட் தயார் செய்தல் பணிமுகாமில் கலந்து கொண்டனர். பல்வேறு பணிகளுக்கிடையில், கம்லேஷ் பாய் அவர்கள் பங்கேற்பாளர்களுடன் நேரத்தை செலவழித்ததுடன், இரண்டு உரைகளும் அளித்தார். பணிவு மற்றும் அன்புடன் பணி செய்வதை வலியுறுத்தினார். மேலும், கம்லேஷ் பாய் அவர்கள் வடகிழக்கிலிருந்து வந்திருந்த இளைஞர்களுக்கு அளித்த உரையில் இணைந்து கொள்ள, பங்கேற்பாளர்கள் அழைக்கப் பட்டிருந்தனர்.

ஒரு பிரிபெக்ட் எவ்வாறு தீவிர அப்யாசியாக இருக்கிறார்? பிரிபெக்ட்கள் அப்யாசத்தில் கவனம் செலுத்துவது மற்றும் நற்பண்புகளை உருவாக்கிக் கொள்வது ஏன் அவசியம்?- அவரது கருவியாக இருப்பதற்கும் அவரது பணியில் பங்கு கொள்வதற்கும்தான் என்பதே கூட்டத்தின் மையக்கருத்தாக இருந்தது. நிகழ்ச்சியானது, ஆன்மீக ஆர்வலர்களுக்கான இன்றியமையாத அம்சங்கள் மற்றும் அவர்கள் தங்களது மையங்கள் மற்றும் ஆசிரமங்களுக்கு எடுத்து செல்ல வேண்டிய முக்கியமான பாடங்கள் மீதான - பிரதிபலிப்பு நிகழ்ச்சியுடன் நிறைவு பெற்றது.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## பொறுப்பாளர் வருகை

### இணைச்செயலாளரின் பயணம் - மண்டலம் 2C (தமிழ்நாடு மேற்கு)

இப்பயணத்தின் நோக்கம், புதிய ஆர்வலர்களுக்கு வரவேற்பு கூட்டங்களில் சொற்பொழிவாற்றுதல், அப்யாசி இல்லக் கூட்டங்கள் நடத்துதல், பிரிபெக்ட்களைச் சந்தித்தல், அப்யாசிகளுடன் கலந்துரையாடலில் அதிக நேரம் செலவிடுதல் ஆகியனவாகும். சகோதரர் விஸ்வநாத ராவ் (மண்டல பொறுப்பாளர்) இப்பயணத்தினை ஏற்பாடு செய்திருந்தார்.

நவம்பர் 8ம் தேதியன்று, கோத்தகிரியிலிருந்து 10 கி.மீ தொலைவில் உள்ள காக்குச்சி என்ற கிராமத்திலுள்ள கிரி ஈஸ்வரா மெட்ரிகுலேஷன் பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அறிமுக வரவேற்பு கூட்டத்தில் சகோ.ஏ.பி.துரை மற்றும் சகோ. எம்.எம். தாணுமூர்த்தி உரையாற்றினர். அங்கு 12 ஆசிரியர்கள் தியானம் ஆரம்பிக்க தாமாக முன்வந்தனர். நண்பகலில், DSSC வெல்லிங்டனில் நடைபெற்ற ஒரு இல்லக்கூட்டத்தைத் தொடர்ந்து, அருவங்காடு மையத்தில், 12 ஆர்வலர்கள் உட்பட 26 பேர் வருகை புரிந்திருந்த வரவேற்புக்கூட்டமும் நடைபெற்றது.

9ம் தேதியன்று, 26 அப்யாசிகள் பங்குபெற்ற முழுநாள் சத்சங்கம் ஊட்டியில் நடைபெற்றது. பயிற்சிமுறையில் பெற்றிருக்க வேண்டிய தெளிவின் அவசியம் மற்றும் ஆன்மீகத்தை நோக்கிய லட்சியம் சார்ந்த தெளிவான அணுகுமுறை குறித்து சகோ. துரை பேசினார். தாங்காடு என்ற அழகிய குக்கிராமத்திலுள்ள சகோதரர் வீட்டில் 9 பேர் கூடியிருந்தனர். அங்கு அந்த குழு சென்றது. தினசரி பயிற்சி மற்றும் சத்சங்கம் நடத்துதல் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

10ம் தேதியன்று, ஊட்டி மையத்தில் 15 ஆர்வலர்கள் மற்றும் பயிற்சியை இடையே விட்டுப்போன சில அப்யாசிகளுக்காக ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. சகோதரர் துரை, பயிற்சிமுறை குறித்தும், அவர்கள் தொடர்ந்து பயிற்சி செய்யவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி விளக்கமளித்தார். நண்பகல் வேளையில், அவர் கோத்தகிரி விஸ்வ சாந்தி மேல்நிலைப் பள்ளியில் 35 ஆசிரியர்களுக்கு அறிமுக விளக்கவுரையாற்றினார். அவர் விவேகானந்தரின் படைப்புகளிலிருந்து மேற்கோள்காட்டி, சம்ஸ்காரங்களின் விளைவாகக் கீழிறங்கி வந்துள்ள ஆன்மா, பௌதீக உடல் என்ற கூண்டில் எவ்வாறு சிறைப்பட்டுள்ளது என்றும், ஒரு திறன் வாய்ந்த குரு அவற்றை அகற்றி, ஆன்மீக ஆர்வலர் முன்னேற எவ்வாறு வழி வகுக்கிறார் என்றும் விவரித்தார்.

5.30 மணியளவில் கோயம்புத்தூரை அடைந்த சகோ. துரை, 15 தன்னார்வத் தொண்டர் ஒருங்கிணைப்பாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டார். பல்வேறு விதமான மையத்தின் செயல்பாடுகள், துணை மையங்களை மேம்படுத்துதல், ஞாயிறு சத்சங்கம் நடைபெறும் இடங்கள் மற்றும் பல மீள்பார்வையிடப்பட்டன.

11 ம் தேதியன்று, கோயமுத்தூர் மைய பிரிபெக்ட்களின் இரண்டு மணி நேர கூட்டம் நடைபெற்றது. சகோதரர் விஸ்வநாத ராவ் அவர்கள் இங்கிருந்து பயணத்தில் கலந்துகொண்டார். காலை 11.30 மணியளவில் சகோ. துரை தன் குழுவினருடன் மஞ்சள் ரயில் சிறப்பு பள்ளிக்கு வருகை புரிந்து, அங்கு கூடியிருந்த 30க்கும் மேற்பட்ட பெற்றோர்களுக்கு சகஜ மார்க்க தியானம் குறித்து உரையாற்றி, அவர்களது வினாக்களுக்கும் விடையளித்தார். அன்று மாலை அவர்கள் பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள ஒரு சகோதரர் வீட்டிற்கு சென்று அங்கிருந்த விருந்தினர்கள் மற்றும் இடையில் விட்டுப் போன அப்யாசிகளுக்கு சகஜ மார்க்கம் குறித்து சுருக்கமாக கூறினர். மேட்டுப்பாளையத்திலிருந்து வந்திருந்த 10 விருந்தினர்களுக்கு சகஜ மார்க்கம் குறித்த உரை வழங்கி, ஒரு கேள்வி-பதில் நிகழ்வையும் அப்யாசிகளிடையே நடத்தினார்.

12ம் தேதியன்று அவர்கள் கருமாத்தம்பட்டிக்கு சென்றனர். அங்கு நடைபெற்ற அரை நாள் நிகழ்ச்சியில், ஒரு வரவேற்பு கூட்டமும், அப்யாசிகளுடன் ஒரு நிகழ்வும் இருந்தது. சத்சங்கம், அதன் பின் மதிய உணவுடன் நிகழ்ச்சி முடிவடைந்தது. நண்பகலில் சரவணம்பட்டியில் சத்சங்கத்திற்காக கூடியிருந்த 10 அப்யாசிகளுக்காக அங்கு சென்றனர். கோயம்புத்தூர் ஆர்.எஸ். புரம் கூடத்தில் மிஷனால் நடத்தப்பட்டு வரும் நூலகத்தில், 170 க்கும் மேற்பட்ட அப்யாசிகள் கூடியிருந்தனர். அங்கு ஒரு கலந்துரையாடல் நிகழ்வு, அதனைத் தொடர்ந்த சத்சங்கத்திற்குப்பின் இரவு உணவும் வழங்கப்பட்டது.

13ம் தேதியன்று, கோபிச்செட்டிப்பாளையத்தில் 120க்கும் மேற்பட்ட அப்யாசிகள் கலந்துகொண்ட ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியில், அப்யாசிகளின் உரைகள் மற்றும் கேள்வி-பதில் மற்றும் விளக்கங்களும் இருந்தன. ஈரோடு மையத்தில், ஈரோடு, மற்றும் அருகில் உள்ள மையங்களான பெருந்துறை, பவானி மற்றும் கோபிச்செட்டிப்பாளையத்திலிருந்து வந்திருந்த சுமார் 120 அப்யாசிகள் கூடியிருந்தனர். 14ம் தேதியன்று திருச்செங்கோடு மையத்தில் 120க்கும் மேற்பட்ட அப்யாசிகள் நாமக்கல், ராசிபுரம் மற்றும் குமாரபாளையத்திலிருந்து வந்திருந்தும் கலந்துகொண்டனர். மாலையில், ஈரோட்டில் அப்யாசி ஒருவரின் வீட்டில் 160 அப்யாசிகள் கலந்துகொண்ட இரண்டு மணி நேர நிகழ்ச்சி நடைபெற்றது.

15ம் தேதியன்று முற்பகலில், 15 பிரிபெக்ட்கள் கலந்துகொண்ட கூட்டம் செட்டிப்பாளையம், பழைய ஆசிரமத்தில் நடைபெற்றது. பிற்பகலில், NIFT- TEA கல்வி நிறுவனத்தில், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்புக் கூட்டத்தில் 60 மாணவர்களும் மற்றும் ஆசிரியர்களும் பங்கேற்றனர்.

16ம் தேதியன்று, DJ பார்க்கில், திருப்பூர் மற்றும் அருகிலிருக்கும் மையங்களிலிருந்து வந்திருந்த அப்யாசிகளுக்கு முழுநாள் நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. காலை சத்சங்கத்தில் 1050 அப்யாசிகள் கலந்து கொண்டனர். காலை சிற்றுண்டிக்குப் பிறகு, கலந்துரையாடல் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து, சீட்டு எடுத்துப் பேசுதல் மற்றும் கேள்வி-பதில் பகுதி ஆகியவை இருந்தன.



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## க்ரெஸ்ட் இயக்குனரின் பயணம்

### பன்வெல் ஆசிரமம், மும்பை

சகோ. மோகன்தாஸ் ஹெக்டே, பெங்களூர் க்ரெஸ்ட் இயக்குனர், நவம்பர் 9 பன்வெல் ஆசிரமத்திற்கு வருகை தந்தார். தினமும் பயிற்சி செய்வதன் அவசியம் மற்றும் தேவையைக் குறித்து அப்யாசிகளிடம் பேசினார். நாம், பத்து நியமங்களை பயிற்சி செய்து சகஜ மார்க்க வாழ்க்கையை இரவும் பகலும் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார். லாலாஜி மற்றும் பாபூஜி அவர்களின் சில முக்கிய படிப்பினைகளை அப்யாசிகளுக்கு நினைவூட்டினார்.

### திருப்பூர்

சகோ. மோகன்தாஸ் ஹெக்டே, நவம்பர் 28 திருப்பூர் வந்தார். 'தன்னிலை அறிதல்' குறித்த நிகழ்ச்சி, பிரிபெக்ட்களுக்காக DJ பார்க்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவர், பிரிபெக்ட்களை 10 நிமிடங்கள் தியானம் செய்து, பின்னர் அனைவரையும் தியானத்தில் உணர்ந்ததை டைரியில் எழுதுமாறு கேட்டுக்கொண்டார். க்ரெஸ்டில் இருக்கும் பல்வேறு செயல்பாடுகள் பற்றி சுருக்கமாகப் பேசினார். அவர், தியானத்தின் மூன்று விதமான - அமரும்நிலை, உள்நிலை, அனுபவம் மற்றும் வழிமுறை ஆகிய கூர்ந்த கவனிப்புகள் குறித்தும் பேசினார்.

நவம்பர் 29 அன்று, திருப்பூர் மற்றும் சுற்றியிருக்கும் மையங்களிலிருந்து சுமார் 140 இளைஞர்களுக்கு, 'சகஜ மார்க்கத்தின் வீரர்கள்' என்ற உறைவிட நிகழ்ச்சி நடத்தப்பட்டது. காலை நிகழ்ச்சி 4:30 மணிக்கு எழுவதில் தொடங்கி, தியானம், நடை மற்றும் உடற்பயிற்சிக்குப் பின், காலை 7:30 மணிக்கு சத்சங்கம் என்றிருந்தது. காலை உணவிற்குப் பிறகு, 'தன்னார்வத் தொண்டரின் தன்மைகள்', 'தன்னார்வத் தொண்டரின் பங்கு', 'இளைஞரின் சக்தியை தக்கவைத்துக் கொள்ளுதல்' ஆகியவை பற்றிய படத்தொகுப்புரை அளிக்கப்பட்டது. பிற்பகலில், தரம், பங்கு மற்றும் தன்னார்வத் தொண்டரின் ஈடுபாடு குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது. மாலையில் ஒரு திரைப்படம் திரையிடப்பட்டது. இப்பகுதி, இரவு 9:30 மணிக்கு, முறைசாரா கலந்துரையாடலுடன் முடிந்தது.



இரண்டாம் நாள், 'பயிற்சியின் சூட்சமங்கள்', 'பத்து நியமங்கள் - என் வழிமுறை' மற்றும் 'சகஜ மார்க்க வாழ்க்கை முறை' குறித்து கூட்டத்தொடர்கள் நடைபெற்றன. பிற்பகலில் ஒரு திரைப்படம் காட்டப்பட்டது. மாலை 6 மணிக்கு நிகழ்ச்சி முடிவடைந்தது. அனைத்து இளைஞர்களும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தனர். சகஜ மார்க்கத்தின் வீரர்களாக இருக்க முடிவெடுத்துக் கொண்டனர்.

## மணப்பாக்கத்திற்கு அப்யாசிகளின் வருகை

ஹல்த்வானி, ஷோலாபூர், கோலாபூர் மையங்களிலிருந்து சுமார் 323 அப்யாசிகள் 10-12 டிசம்பர் 2014 ல் நடந்த மூன்று நாள் கருத்தரங்கிற்காக, மணப்பாக்கம் வந்தனர். அவர்களுக்காக, மாஸ்டரின் போதனைகள், 3M, சந்தேகங்களைத் தெளிவுபடுத்தும் கேள்வி-பதில் பகுதி ஆகிய கூட்டத்தொடருடன் பிரிபெக்ட்களுக்கான கூட்டமும் நடைபெற்றது.



## புதிய வெளியீடுகள்




ஹார்ட் ஸ்பீக் 2001
ஆங்கிலம்




த ப்ரின்ஸிபில்ஸ் ஆப் சகஜ் மார்க் பாகம் -16
(த கிப்ட் ஆப் லவ்)
ஆங்கிலம்



ஹார்ட் ஸ்பீக் 2011
தெலுங்கு

## புதிய நியமனங்கள்

**கேப்டன். வினீத் ரனவத்**
இணை செயலாளர் மற்றும் காரியக்குழு உறுப்பினர்

**ஸ்ரீகுமார் கேசவன்**
மையப்பொறுப்பாளர், ஆலுவா

**ரவீந்த்ர குமார் சின்ஹா**
ஷாஜஹான்பூர் ஆசிரமப் பொறுப்பாளர்

# யூ-கனெக்ட் நிகழ்ச்சிகள்

**திறனாளர் பயிற்சி - வார்தா, மகாராஷ்டிரா**




இம்மண்டலத்திற்கான யூ-கனெக்ட் திறனாளர்களுக்கான இரண்டு நாள் அறிமுக மற்றும் மாதிரி நிகழ்ச்சி, நவம்பர் 29, 30 ஆகிய தேதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாக்பூர், சந்த்ரபூர், வார்தா, யவத்மால் மற்றும் பாந்த்ரா ஆகிய பகுதிகளிலிருந்து வந்திருந்த அப்யாசிகள் பங்கேற்றனர். நன்கு பயிற்சி பெற்ற ஆறு யூ-கனெக்ட் திறனாளர்கள் மாதிரி வகுப்பறை நிகழ்வுகளை இந்தி மற்றும் மராத்தியில் நடத்தினர். விளையாட்டுகள் மற்றும் செயல்பாடுகள் வாயிலாக பல்வேறு மனித நன்னெறிகள் விவரிக்கப்பட்டு, உட்புகுத்தப்பட்டன.

**ஜெய்ப்பூர், ராஜஸ்தான்**

யூ-கனெக்ட் முன் முயற்சியின் கீழ், முதல் சுய மேம்பாட்டு நிகழ்ச்சியின் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் நிகழ்வானது, நவம்பர் 16 ஞாயிறு அன்று மண்டல ஆசிரமத்தில் நடைபெற்றது. ஆர்க் பாய்ண்ட் கன்சல்டன்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்-ஐ சார்ந்த ஆறு பயிற்சியாளர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. யூ-கனெக்ட்டின் மிஷன் அறிமுக உரையுடன் இந்நிகழ்வானது ஆரம்பிக்கப்பட்டது. இந்த சுய மேம்பாட்டு நிகழ்ச்சியானது 16 வாரங்கள் நடைபெற்றது. 2014 ஜூலை 19 அன்று நிறைவு பெற்றது. திறனாளர், உதவியாளர், ஒருங்கிணைப்பாளர், கணிணி வல்லுநர் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் 17 தன்னார்வலர்கள் உதவி புரிந்தனர். இந்தப் பயிற்சியாளர்களிலிருந்து இரண்டு பங்கேற்பாளர்கள் அறிமுக தியானம் எடுத்துக் கொண்டனர். வருங்காலத்தில் யூ-கனெக்ட்டின் செயல்திட்டங்களில் பங்கேற்குமாறு அனைத்து அப்யாசிகளுக்கும் சகோ.சந்தீப் நாயர் (ஒருங்கிணைப்பாளர் - மண்டலம்-7) அவர்கள் அழைப்பு விடுத்தார். சமநிலைப்படுத்தப்பட்ட வாழ்க்கையை நடத்த பெற்றிருக்க வேண்டிய திறன்கள் பயிற்சியில் பிரதிபலிக்கப்பட்டது. பங்கேற்பாளர்கள் அனைவரும் தங்களுடைய கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். மேலும் தங்களின் உள்முக மாற்றத்தை உணர்ந்தனர். இரண்டாவது சுயமேம்பாட்டு நிகழ்ச்சியானது, நவம்பர் 29 அன்று ஜெய்ப்பூரில் ஆரம்பிக்கப்பட்டது.



**சண்டிகர், பஞ்சாப்**

சுயமேம்பாட்டு நிகழ்ச்சியின் 12 வார சான்றிதழ் பயிற்சியின் துவக்க விழாவானது, பஞ்சாப் பல்கலைகழகத்தில் நவம்பர் 22 அன்று நடைபெற்றது. பல்கலைகழத்தின் துணைவேந்தர் பேராசிரியர். குரோவர், தன்னுடைய துவக்க விழா உரையில், இப்பயிற்சியானது சுய பரிசோதனை செய்துகொள்ள தன்னை எவ்வாறு ஊக்குவித்தது என்பதையும், இவ்விழாவில் பங்கேற்பது மிக்க மகிழ்வை அளிக்கிறது என்பதையும் பகிர்ந்து கொண்டார். இப்பயிற்சியின்பால் மிகவும் ஈர்க்கப்பட்ட அவர், இப்பயிற்சியானது மிகுந்த பலன் தரக்கூடியது என்றும், 3000 மாணவர்களைச் சென்றடைய வேண்டும் என்றும் வலியுறுத்தினார். சுயமேம்பாடு என்பது காலத்தின் தேவை என்பதால், அனைத்து மாணவர்களும் பங்கேற்க வேண்டும் என்று அவர் கூறினார்.

விழாவில், மிஷனின் அப்யாசிகளும், பிரிபெக்ட்களும் அதிக அளவில் கலந்து கொண்டனர். ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஹர்பஜன் (ZIC-zone 10) மற்றும் சகோ. ஜுகல் கிஷோர் (யூ- கனெக்ட் பிராந்திய ஒருங்கிணைப்பாளர்) ஆகியோர் மிஷனின் பிரதிநிதிகளாக இருந்து நன்கு கலந்துரையாடினர்.

**குவாலியர், மத்திய பிரதேசம்**

குவாலியரில் உள்ள மாதவ் சிக்ஷ மகாவித்யாலயா கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கு, சுயமேம்பாட்டு நிகழ்ச்சியானது, அக்டோபர் 20 அன்று தொடங்கப்பட்டது. இளைஞர்களுக்கு வழிகாட்டப்பட்டதொரு நன்னெறி வாழ்க்கை வாழ ஊக்கப்படுத்துதல், ஆன்மீக இலட்சியம் மற்றும் அறம் சார்ந்த உலகாயத வாழ்க்கை இரண்டும் இணைந்த சமநிலைப்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ உதவுதல், தேச நலனைப் பேணுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இப்பயிற்சியானது ஆரம்பிக்கப்பட்டது. நிகழ்ச்சிகளானது வாரமிருமுறை திங்கள் மற்றும் வியாழன் அன்று நடத்தப்பட்டது. 11-வது கூட்ட அமர்வின் பொழுது, 25 மாணவர்கள், கல்லூரி முதல்வர் மற்றும் 4 திறனாளர்கள் மற்றும் யூ-கனெக்ட் குழு உறுப்பினர்களுடன் குவாலியர் ஆசிரமத்திற்கு வருகை தந்தனர். கல்லூரி முதல்வர் உட்பட, இதுவரை 13 மாணவர்கள் சகஜ மார்க்க பயிற்சியினை துவக்கி உள்ளனர். மேலும் கல்லூரி வளாகத்திலேயே வாராந்திர சத்சங்கத்தினை நடத்திக்கொள்ள அனுமதியையும் இக்குழுவினர் பெற்றுள்ளனர்.









## குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள்

### "உடான்" டில்லி மண்டல ஆசிரமம்

மிஷனின் இளம் அப்யாசிகளால் திட்டமிட்டு நடத்தப்பட்ட குழந்தைகளுக்கான முழு நாள் நிகழ்ச்சியில் சுமார் 131 குழந்தைகள் கலந்து கொண்டனர். ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு "மாஸ்டர் சொல்வது", பந்தயங்கள், கைவினைப்பொருட்கள் செய்வது, பாட்டு மற்றும் நடனம் போன்ற நிகழ்ச்சிகளும், சற்று பெரிய குழந்தைகளுக்கு, இழுபறி (tug ofwar)பந்தய போட்டிகள் ஆகியவைகளும் இருந்தன. "வீணான பொருட்களைப் பயனுள்ளவையாகச் செய்தல்" போன்ற போட்டிகள், அவர்களின் கற்பனைத் திறனை எடுத்துக்காட்டியது. கடைசியாக விளையாடப்பட்ட புதையல் வேட்டை (Treasure hunt)யில் புதையலாக, செடிக்கன்றுகள் வைக்கப்பட்டிருந்தன. அவர்களின் இயற்கை மற்றும் சுற்றுச்சூழலின் பேரில் அக்கறை வளர்வதற்காக, அக்கன்றுகளே பரிசாக வழங்கப்பட்டன. நிகழ்ச்சியின் முடிவில், ஒரு சகோதரர் ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை பற்றி அவர்களிடம் பேசினார்.

### மொரதாபாத், உத்திரப் பிரதேசம்



கடந்த டிசம்பர் 7ம் தேதி 25 குழந்தைகள், "நன்றி மாஸ்டர்" என்ற தலைப்பில் வாழ்த்து அட்டை தயாரிக்கும் போட்டியில் கலந்து கொண்டனர். அவர்கள் தயாரித்த அழகான வாழ்த்து அட்டைகள், அவர்களிடையே காணப்பட்ட ஒற்றுமை, உற்சாகம் மற்றும் ஒருவருக்கொருவர் உதவியாயிருத்தல் ஆகிய பண்புகளை வெளிக்காட்டியது. அவர்களின் அந்த முயற்சியை பாராட்டுவதற்காக பரிசுகள், வயது அடிப்படையில் வழங்கப்பட்டது.

### கோவா

நவம்பர் 16ம் தேதி அப்யாசிகளின் குழந்தைகள் மற்றும் அவர்களின் நண்பர்களுக்கும், ஓவியம் மற்றும் வாழ்த்து அட்டை தயாரிக்கும் போட்டிகள் நடத்தப்பட்டன. சிற்றுண்டிக்கு பின்னர், ஆசிரமத்தில் விளையாடி மகிழ்ந்தனர். மாஸ்டரின் வீடியோவிற்குப்பின்னர் ஒரு சகோதரி அவர்களிடம் மிஷனின் நோக்கம், எப்படி குழந்தைகளுக்கு தங்களை முழுமையானவர்களாக மாறவும், நல்ல மனிதர்களாக ஆகவும் மிஷன் உதவியாக இருக்கிறது என்பது பற்றி பேசினார்.

### பெங்களூர், கர்நாடகா

ஐ.நாவின் சர்வதேச குழந்தைகள் தினம் கடந்த நவம்பர் 23ம் தேதியன்று, பனசங்கரி ஆசிரமத்தில் முழு நாள் நிகழ்ச்சியாக கொண்டாடப் பட்டது. ஆசிரமம், காலை சத்சங்க நேரத்தில் குழந்தைகள் தங்களின் பாட்டு மற்றும் நாடக முயற்சிகளில் ஈடுபட்டிருந்ததால், மும்முரமாகக் காணப்பட்டது.

சத்சங்கத்திற்குப்பின்னர், அப்யாசிகளுக்கு, மாஸ்டரின் "பெற்றோர் தன்மை" பற்றிய DVD உரைகளும், ஆசிரம குழந்தைகள் மைய நடவடிக்கைகளைப் பற்றிய ஒரு குறும்படமும் காட்டப்பட்டது. அப்யாசிகள், தங்களின் குழந்தைக்காலத்திற்கு அவர்களை எடுத்துச் செல்லும் நோக்கமாக இந்நிகழ்ச்சி அமைந்திருந்தது. ஒரு சிறிய விளையாட்டிற்குப் பின்னர், அவர்களை குழுக்களாக பிரித்து, குழந்தைகளைப்பற்றிய, மாஸ்டரின் மேற்கொள்கள் கொடுக்கப்பட்டு, அவற்றை தங்களுக்குள் விவாதித்து கவிதையாகவோ, சிறுநாடகமாகவோ, படதொகுப்பாகவோ விவரிக்குமாறு போட்டி வைக்கப்பட்டது. ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், பாட்டு மற்றும் நடவடிக்கைகளை மிக அன்பாக செய்து காட்டினர். ஆறு வயதிலிருந்து ஒன்பது வயது குழந்தைகள் ஒரு பாடல் பாடியும், சிறு நாடகம் நடித்தும் காட்டினர். பின்னர் அப்யாசிகளின் குழுக்கள் தங்களின் போட்டி விளக்கங்களை தந்தபின், ஒன்பது வயதிற்கு மேல்பட்ட குழந்தைகள் குழுப்பாடல் ஒன்றையும், சிறு நாடகத்தையும் நடித்துக் காட்டினர். அவர்கள் அன்று காலை முதல் சிறிது நேரமே பயிற்சியில் ஈடுபட்டிருந்தாலும், அழகாகவும், நம்பிக்கையுடனும் செய்து காட்டியது, பெற்றோர்களை உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் ஆக்கியது.







## உ.பி. பிரசெப்டர்கள் கருத்தரங்கு

**ஷாஜஹான்பூர்**

நவம்பர் 12-முதல் 16-வரையிலான 5 நாட்கள் நடைபெற்ற கருத்தரங்கில் உ.பி.-யைச் சேர்ந்த 150 பிரசெப்டர்கள் கலந்து கொண்டனர். நியமங்கள் 2 , 10 ஆகியவற்றைப் பின்பற்றி, தீவிரப் பயிற்சி செய்வதன் மூலம் கிடைக்கப்பெற்று, அனுபவிக்கக்கூடிய, முக்கியத்துவத்தை உணராத, மாசற்றதன்மை என்ற நிலையினைக் குறிக்கும் "தன்னடக்கம்" என்பது, கருத்தரங்கின் பொருளாக இருந்தது.

நடந்து கொள்ளும் விதம் மற்றும் குணநலன்கள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல் போன்றவை நன்றாக எடுத்துரைக்கப்பட்டது. கருத்தரங்கின் முடிவில் ஒவ்வொருவரும் பிரார்த்தனை நிலையில் சங்கல்பம் செய்து கொண்டு. தங்களை உணர்தல் மற்றும் திருத்திக் கொள்ளுதல் போன்றவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்தனர். நம் அன்புக்குரிய மாஸ்டர் அவர்களால் உருவாக்கப்பட்டிருந்த சூழலானது கருத்தரங்கின் முக்கியமான சிறப்பம்சமாகும். நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் இது ஒரு ஆழ்ந்த அனுபவம் ஆகும்.

## விஸ்பர்ஸ் பற்றிய நிகழ்ச்சிகள்

**ஹைதராபாத், ஆந்திரபிரதேசம்**

டிசம்பர் 5 முதல் 7வரை கன்கா சாந்தி வன ஆசிரமத்தில், ஆந்திரபிரதேசம் மற்றும் தெலங்கானாவைச் சேர்ந்த 100 அப்யாசிகளுக்காக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சியின் நோக்கமானது, விஸ்பர்ஸ் படிப்பதை தினசரி சாதனாவின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டியதின் ஒரு ஆழ்ந்த விழிப்புணர்வை உருவாக்குதலாகும். ஞாயிறு சத்சங்கங்கள் மற்றும் மற்ற ஆன்மீக கூட்டங்களில் விஸ்பர்ஸை படிக்க வேண்டிய வழிமுறைகள் பற்றி பங்கேற்பாளர்களுக்கு உணர்த்துவதே இதன் குறிக்கோளாகும்.

இந்த நிகழ்ச்சியில், விஸ்பர்ஸின் முக்கியத்துவம், விஸ்பர்ஸை எவ்வாறு அணுகுவது, மாஸ்டர் மற்றும் சேவை பற்றிய தலைப்புகள் இடம்பெற்றன. விஸ்பர்ஸ் செய்திகள் ஆங்கில மற்றும் தெலுங்கு மொழிகளில் வாசிக்கப்பட்டதுடன் அந்த செய்திகளின் அர்த்தத்தில் தியானம் செய்வதற்கு அப்யாசிகளுக்கு நேரமும் கொடுக்கப்பட்டது. இடையிடையே காட்டப்பட்ட பாபூஜி அவர்களின் வீடியோ மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களில், நமது மாஸ்டர் மற்றும் கமலேஷ் பாய் அவர்களின் உரைகள் ஆகியவற்றுடன் இந்நிகழ்ச்சி மூன்று நாட்களும் நடத்தப்பட்டது.

தத்தம் மையங்களில் இந்த மாதிரி நிகழ்ச்சிகளை எவ்வாறு நடத்துவது என்பதை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் விளக்கினர். இம் மாதிரியான நிகழ்ச்சி இந்த ஆசிரமத்தில் நடப்பது இதுவே முதல் முறை ஆகும். அர்ப்பணிப்பு கொண்ட தன்னார்வத் தொண்டர்கள் இந்த நிகழ்ச்சியில் அனைத்தும் சுமுகமாக செல்வதை உறுதிபடுத்தினர். பங்கேற்பாளர்கள் இந்த இடத்தில் ஒரு ஆழ்ந்த அமைதியை உணர்ந்ததுடன் இந்த மாதிரியான நிகழ்ச்சியை நடத்துவதற்கு இதுவே உகந்த இடம் என்பதையும் அறிந்தனர்.

## பத்து நியமங்கள் பற்றிய பணிமுகாம்

**இந்தூர், மத்தியபிரதேசம்**

டிசம்பர் 12-முதல் 14-வரை நடைபெற்ற உறைவிட நிகழ்ச்சியில், இந்தூர் மற்றும் அருகிலிருந்த மையங்களைச் சேர்ந்த 41 அப்யாசிகள் கலந்து கொண்டனர். இது 12-ஆம் தேதி சத்சங்கத்துடன் தொடங்கியது. ஒவ்வொரு நியமும் தனித்தனியான பகுதியாக விளக்கப்பட்டது. இதில் பாபூஜி மகராஜின் பத்து நியமங்கள் பற்றிய விளக்க புத்தகத்தில் கூறியுள்ளபடி ஒவ்வொரு நியமத்தின் பின்னாலுள்ள தத்துவம் விளக்கப்பட்டதுடன், இந்த நியமங்கள் எப்படி அப்யாசிகளுக்கு தத்தம் குறிக்கோளை அடைய உதவி செய்யும் என்பதை உணரச்செய்வதை நோக்கமாக கொண்டிருந்தது. மேலும் இதில் ஒவ்வொரு நியமத்தின் நடைமுறைச் சாத்தியம் மற்றும் அதன் சிக்கல்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் விளக்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சி தொடரத்தொடர அப்யாசிகள் அதில் ஆழ்ந்து, விளக்கங்களை உணர்ந்ததுடன், இந்த நியமங்களை பயிற்சி செய்யவேண்டிய தூண்டுதலையும் இதயத்தில் உணர்ந்தனர். ஒரு மாதத்திற்கு முன்பே இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் தொடங்கின. ஒவ்வொரு நியமத்திற்கும் இரண்டு அப்யாசிகள் கொண்ட குழுவால் விளக்கவுரைகள் தயாரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒரு குழு உரையாடலும் இடம் பெற்றது.





## தெலுங்கு புத்தக வெளியீட்டுக் கருத்தரங்கு

**ஹைதராபாத்**

புத்தக வெளியீட்டுப் பணிகளைப் புரிவதற்கு, இப்பொழுதிருக்கும் குழுக்களை விரிவுபடுத்தவும், புதிதாகக் குழுக்களை அமைக்கும் பொருட்டும் 100 அப்யாசிகளுக்காக, தும்குண்டா ஆசிரமத்தில், நவம்பர் 29, 30ம் தேதிகளில், ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முதல் நாள் முடிவில், கீழ்கண்ட அணிகள் ஏற்படுத்தப்பட்டன: புத்தக மொழிபெயர்ப்பு, சகஜ மார்க்கப் பத்திரிகை, எக்கோஸ் செய்திப்பத்திரிகை, துணை உரை செய்தல், பல்பொருள் கலவை, தங்கப் பிரதி, தொழில்நுட்பம், ஆடியோ புத்தகங்கள் மற்றும் திட்டமிடுதல் மற்றும் விற்பனையை உயர்த்துதல் ஆகியவையாகும். ஒவ்வொரு அணியிலும் இரண்டு ஒருங்கிணைப்பாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், மதிப்பாய்வாளர்கள், அச்சுப்பார்வைப்படி திருத்துபவர் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள் இருப்பார்கள். இரண்டாவது நாளன்று, ஒவ்வொரு குழுவும் தங்களுக்குள்ளே இணைந்தியங்கி அடுத்த ஒரு மாதத்திற்குத் தங்களது பணித்திட்டத்தை வெளியிட்டனர். ஒவ்வொரு அணிக்கும் பயிற்சி முகாம்களும் நடத்தப்படும்.

குழுவினர் அனைவரும் இணைந்தியங்கும் பொருட்டு ஒரு மின்ணணு மன்றம் (electronic forum) ஏற்படுத்தப்பட்டது. பணியைப் பற்றி பல்வேறு தலைப்புகளில் கலந்துரையாடல் நடத்துவது, கேள்விகளுக்கு பதிலளிப்பது மற்றும் அவரவர்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது ஆகியவை அதில் நடைபெறும். பங்கேற்றவர்கள் எல்லோரும் மிகுந்த உற்சாகத்தை வெளிப்படுத்தினார்கள். அவர்கள் தமது பணியைப் பற்றி ஆழமாக உணர்ந்ததுடன், இம்முயற்சியில் பங்கேற்பதில் தீவிர ஊக்கத்தை வெளிப்படுத்தியவாறு திரும்பச் சென்றனர்.

## பிராந்தியக் கூட்டங்கள்

**கோல்ஹாபூர், மஹாராஷ்ட்ரா**

16ம் நவம்பர் அன்று கோல்ஹாபூர் முதன்முறையாக ஏற்பாடு செய்து நடத்திய பிராந்தியக் கூட்டத்தில் கோல்ஹாபுர், ஸதாரா, கரட், மீரஜ், குர்லப், ரத்னகிரி, ஸவந்த்வாட மற்றும் ஸங்க்லி ஆகிய இடங்களிலிருந்து 200 அப்யாசிகளும் 25 சிறுவர்களும் பங்கேற்றனர். சகோதரர் சுபாஷ் வைத்யா (ZIC MH-5A) சத்சங்கத்திற்குப் பிறகு குழுமியிருந்தோருக்கு உரை நிகழ்த்தினார். அக்கம்பக்கத்து மையங்களின் சார்பாக அவைகளின் ப்ரிபெக்டுகள் பிரதிநிதிகளாக வந்திருந்தனர். ஒவ்வொருவரும் தமக்கு வழங்கப்பட்ட தலைப்பில் உரையாற்றினர். உரைகளெல்லாம் சிறப்பாக அமைக்கப்பட்டு ஊக்கமளிக்கும் வகையில் இருந்தன. சாதனாவின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய புதிய அறிவாற்றலை வழங்கின. புதிதாகச் சேர்ந்திருந்த அப்யாசிகள், இவ்வுரைகள் சகஜ மார்க்கப் பயிற்சியை தெளிவாகப் புரிந்து கொள்ள உதவியதாகக் கூறினர்.

**தஞ்சாவூர், தமிழ்நாடு**

’சகஜ மார்க்கப் பயிற்சியும், சகஜ மார்க்கத்தில் அப்யாசிகளின் பங்கும்’ என்னும் தலைப்பில் தமிழில் நடைபெற்ற ஒரு இரண்டு நாள் உறைவிட நிகழ்ச்சி, 29 மற்றும் 30 நவம்பர், தஞ்சாவூரின் ஜெண்பகபுரம் ஆசிரமத்தில், தஞ்சாவூரைச் சேர்ந்த 64 அப்யாசிகள் மற்றும் 16 ஒருங்கிணைபாளர்களுக்காகவும் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சகஜ மார்க்கப் பயிற்சி, குண உருவாக்கம், மறைபொருள் சின்னம் (esoteric symbol) மற்றும் சகஜ மார்க்க வழி சார்ந்த வாழ்வை நடைமுறைபடுத்துவது ஆகியவை இடம்பெற்றன.

சத்சங்கத்துடன் தொடங்கிய நிகழ்ச்சியில் பின்னர், சகஜ மார்க்கப் பயிற்சியின் முக்கியத்துவம் மற்றும் அப்யாசிக்குத் தனது சுயத்தின் பொருட்டு உள்ள கடமைகள், சமநிலையான மனதை அடையும் வழிகள் ஆகியவை பற்றிய ஒரு முன்னுரை ஆற்றப்பட்டது. நிகழ்ச்சியின் போது, பங்கேற்ற ஒவ்வொருவருக்கும் பயிற்சியை பற்றிய இரண்டு சிறிய புத்தகங்களும், சகஜ மார்க்கப் பயிற்சி முழுவதையும் கொண்ட ஒரு குறிப்பேடும், பயிற்சி சாதனங்களாக வழங்கப்பட்டன. ஒவ்வொரு ஒருங்கிணைப்பளருக்கும், நிகழ்ச்சி முழுவதற்கும், ஐந்து அப்யாசிகளைக் கொண்ட ஒரு குழு தரப்பட்டு, அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் விவரமாகக் கலந்துரையாடி, குழுவினரின் கேள்விகளுக்கு பதிலளித்ததுடன் அவர்களை குழுக்கலந்தாய்விலும் ஈடுபடுத்தினர். பயிற்சியை பற்றிய மாஸ்டரின் DVD ஒளிபரப்பட்டது. ஒரு பின்னூட்டு பகுதி மற்றும் சத்சங்கத்துடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.



# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

**எக்கோஸ் இந்தியா செய்திமடல்**

## செய்தி துணுக்குகள்

### ஹுப்ளி, வடக்கு கர்நாடகா

டிசம்பர் 14ம் தேதியன்று, "குழந்தைகளைப் பேணுதல் மற்றும் உறவுமுறைகள்" என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதில் ஹுப்ளி, கல்லூர், தார்வார், நவ்நகர் மற்றும் காட்பட்டி முதலிய இடங்களிலிருந்து 70 க்கும் மேற்பட்ட அப்யாசிகள் கலந்து கொண்டனர்.


ஹுப்ளி

### மையம் பார்வையிடல், தமிழ் நாடு

அக்டோபர் 19ம் தேதி அன்று, கருமாத்தம்பட்டியிலிருந்து 14 அப்யாசிகள், கூனூர் மற்றும் ஊட்டி மையங்களுக்குச் சென்று, அங்கு சத்சங்கத்தில் கலந்து கொண்டனர். பின் அப்யாசிகள் நியமமான சாதனை முறை, மாஸ்டரின் பால் அன்பை வளர்த்துக்கொள்ளுதல் போன்றவை மீதான தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். கூனூர், ஊட்டி அப்யாசிகளின் விருந்தோம்பலையும் சகோதரத்துவத்தையும் கண்ணுற்று மிகவும் ஈர்ப்படைந்தனர்.


ஊட்டி


கோலா கோகர்நாத்

### கோலா கோகர்நாத், உத்தரப்பிரதேசம்

’புருஷோத்தம் பாலவித்யா மந்திர்’ பள்ளியில் ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் ’நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்’ பள்ளி, மற்றும் ’புருஷோத்தம் வித்யா மந்திர்’ பள்ளியிலிருந்து, 23 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.


வேலூர்

### வேலூர், தமிழ்நாடு

’நிலையான நினைவு’ பற்றிய இரண்டு நாள் நிகழ்ச்சி, வடவிரிஞ்சிபுரம், வேலூர் ஆசிரமத்தில் நவம்பர் 8, 9 தேதிகளில் நடைபெற்றது. அதில், சுற்று வட்டார மையங்களிலிருந்து சுமார் 24 அப்யாசிகள் கலந்து கொண்டனர்.



வதோதரா

### வதோதரா, குஜராத்

அல்காபுரி, வதோதராவிலுள்ள ’வதோதரா மேல்நிலை’ பள்ளியில் உயர்நிலை மாணவர்களுக்காக, ’நன்நெறிகளும் தலைமைப்பண்பும்’ என்ற பொருளில் இரண்டு நாள் கருத்தாய்வு நடத்தப்பட்டது. தங்களின் தன்னம்பிக்கையை ஊக்குவிக்கவும், மற்றும் தங்களை சுயகௌரவத்துடன் நோக்கவும் உதவிய கலந்துரையாடல் நிகழ்ச்சியை மாணவர்கள் அனைவரும் ரசித்தனர்.

## சாதனா முறையின் அடித்தளம் - பயிற்சி நிகழ்ச்சி

இந்தியாவின் பல் வேறு மையங்களில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் சில புகைப்படங்களை இங்கே காணலாம்.


ஜோத்பூர்


சிர்சி


பட்டியாலா


சிரோஹி


கோவா


பாலக்காடு

# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## சாதுபள்ளி ஆசிரமம், தெலங்கானா

## ஒளி மையம்





சாதுபள்ளி, தெலங்கானா மாநிலத்தில், கம்மம் மாவட்டத்தில் உள்ள ஒரு நகரம். இது விஜயவாடாவிலிருந்து சுமார் 100 கி.மீ. தொலைவில் உள்ளது. விஜயவாடாவிற்கும் வாரங்கலுக்கும் இடையே அமைந்துள்ள கம்மம், அருகில் உள்ள ரயில் நிலையமும், மாவட்டத் தலைமையகமும் ஆகும்.

1980- 1990 ல் சுமார் 10 அப்யாசிகள் சகஜ மார்க்கப் பயிற்சியை மேற்கொண்டிருந்தனர். 1990 ல், பிரிபெக்ட் சகோதரர், P. சூர்ய பாஸ்கரம், கம்மம் மாவட்டத்தில் உள்ள பேலம்பள்ளியில் இருந்து, கொத்தகுடேமிற்கு பணி மாற்றம் கிடைக்கப் பெற்றார். அவர் சுமார் 60 கி.மீ. பயணம் செய்து, சாதுபள்ளி அப்யாசிகளைச் சந்திக்கச் செல்வார். அவரது வருகைகளினால், 1997-98 ஆண்டிற்குள், அப்யாசிகளின் எண்ணிக்கை பத்திலிருந்து இருபதாக அதிகரித்தது.

ஆசிரமம் கட்டுவதற்காக, கம்மம் மாவட்டத்தில் இருந்து ராஜமுந்திரி செல்லும் முக்கிய சாலைக்கு அருகில், நகரின் முக்கியப் பகுதியில், சுமார் 278 சதுர கஜம் அளவுள்ள நிலத்தை, ஒரு அப்யாசி சகோதரர் நன்கொடையாக வழங்கினார். 1992, பிப்ரவரி 26 ம் தேதி, அந்த நிலம், ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷனின் பெயரில் பதிவு செய்யப்பட்டது. அப்யாசிகள் மற்றும் உள்ளூர் மக்கள் வழங்கிய நன்கொடையின் உதவியால், RCC பலகைகளினால் ஆன ஒரு ஆசிரமக் கட்டிடம் கட்டப்பட்டு, 1998 ம் ஆண்டு நிறைவுற்றது. 545 சதுர அடியில் தியானக் கூடமும், 200 சதுர அடியில் ஒரு சமையலறையும் கொண்ட தரைத்தளம், மொத்தம் 2502 சதுர அடி பரப்பளவில் உள்ளது. ஒரு கணினி, அச்சுப்பொறி (printer) மற்றும் இணையத் தொடர்புடன் கூடிய ஒரு நூலகமும் உள்ளது. 1994, ஜூன் 27 ம் தேதி, சகோ. S.A. சாரநாத் அவர்களால் ஆசிரமம் துவக்கி வைக்கப்பட்டது. 2011 ம் ஆண்டு, மேல் தளத்தில், உணவுக்கூடம் மற்றும் உணவுப் பண்டகம் ஆகியவைகளுக்காக, ஒரு திறந்த கூடமும், கூடுதலாக இரண்டு அறைகளும் கட்டப்பட்டு, 2011, பிப்ரவரி 2 ம் தேதி தொடங்கி வைக்கப்பட்டன.

ஆசிரமம் உள்ள அதே தெருவில், சுமார் 40 அப்யாசிகள் வசிக்கின்றனர். அவர்கள் தினமும், காலை 5-6, 9-10 மற்றும் மாலை 5-6 சத்சங்கங்களுக்காக ஒன்று கூடுகின்றனர். தினமும் காலை 11 முதல் மதியம் 1 மணி வரை, விஸ்பர்ஸ் செய்திகள் மற்றும் மிஷன் புத்தகங்கள் வாசிக்கப்படுகின்றன.

தனி சிட்டிங்குகள் கொடுப்பதற்கும், மற்றும் முழு நாள் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும், கம்மம் மற்றும் கொத்தகுடேம் மையங்களிலிருந்து பிரிபெக்ட்கள் வந்து கொண்டிருக்கின்றனர்.

தற்சமயம் அப்யாசிகளின் எண்ணிக்கை 80 க்கும் அதிகமாக உள்ளது. 2013, ஆகஸ்ட், செப்டம்பரில் நடைபெற்ற GITP நிகழ்ச்சியில், புதிய அப்யாசிகள் உட்பட, அனைத்து அப்யாசிகளும் பங்கேற்றனர்.







To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2015 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.